இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கொய்யாத்தோப்பு திட்டப்பகுதியில் ரூ.61.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 324 அடுக்குமாடி குடியிருப்பினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.பிரபாகர், இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.விஜயகார்த்திகேயன் உட்பட பலர் உள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டம்

குன்னம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி - மாவட்ட நூலகம்!

அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி திடீர் ஆய்வு!

பெரம்பலூர், ஆக. 22 -

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி குன்னம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் மாவட்ட நூலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் அரசுப்பள்ளிகளில் அடிப்படை வசதிகள் குறித்தும் அவ்வப்போது நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்படும் என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிக்கை எண் 77ல் தெரிவித்திருந்தார். 234/77 ஆய்வுப்பயணம் என்ற தலைப்பில் அரசுப்பள்ளிகளில் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

இது இத்திட்டத்தின் கீழ் 175 ஆவது ஆய்வாகும்.

அதனடிப்படையில், பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குன்னம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

பள்ளியில் நடந்து கொண்டிருந்த சிறப்பு வகுப்புகளைப் பார்வையிட்ட பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாணவர்களிடம் கலந்துரை யாடினார். பின்னர் பள்ளியின் வகுப்பறைகள், கழிப்பறை உள்ளிட்ட பகுதிகளைப் பார்வையிட்ட அமைச்சர், அடிப்படை வசதிகள் அனைத்தும் உள்ளதா என வும் ஆய்வு செய்தார்.

பின்னர், பெரம்பலூர் மாவட்ட மைய நூல கத்தினை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நூலகத்தில் எத்தனை புத்தகங்கள் உள்ளது, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய தேர்வுகள், அரசுப்பணிகளுக்கான போட்டித்தேர்வுகளுக்கு தேவையான புத்தகங்கள் நூலகத்தில் உள்ளதா என்று கேட்டறிந்த பள்ளிக்கல்வித்துறை அமைச்சர், நூலகத்தில் வாசகர்களுக்கு போதிய அடிப்படை வசதிகள் உள்ளதா எனவும், புதிதாக கட்டப்பட்டு வரும் கழிவறைகளையும் பார்வையிட்டார்.

மேலும், நூலகங்களுக்கு வர இயலாத நிலையில் உள்ளவர்களுக்கு தன்னார்வலர்கள் மூலம் அவர்களின் வீட்டுக்கே சென்று தேவையான நூல்களை வழங்கும் சிறப்பான திட்டமான "நூலக நண்பர்கள்" திட்டம் குறித்து வாசகர்களிடத்திலும், மாணவர்களிடத்திலும், பொதுமக்களிடத்திலும் அதிக விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, குன்னம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் கருணாநிதி, இரண்டாம்நிலை நூலகர் சரஸ்வதி ஆகியோர் உடனிருந்தனர்.

சென்னையில் இன்று நடைபெறுகிறது!

சென்னப்ப நாயகர் பட்டணம் சென்னை தினம் நிகழ்ச்சி!

நல வாரியத் தலைவர் பொன்குமார் ஏற்பாட்டில்!

சென்னை, ஆக. 22 -

சென்னைப் பட்டணம் தோற்றுவிக்கப்பட்ட ஆகஸ்ட் 22 ஆம் இன்று சென்னை தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. சென்னப்ப நாயகர் பட்டணம் சென்னை தினத்தை கொண்டாடும் வகையில் சமூக நீதி சத்திரியர் பேரவை சார்பில் இன்று சென்னையில் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்தியாவிற்கு வியாபாரம் செய்ய வந்த கிழக்கிந்திய கம்பெனிக்காரர்களான ஆங்கிலேயர்களுக்கு கோட்டை மற்றும் குடியிருப்புகளை கட்டிக் கொண்டு வியாபாரம் செய்திட தாமல் வெங்கடப்ப நாயகர் தமது ஆளுமையின் கீழிருந்த மாதரசன் பட்டினப் பகுதிகளைக் கொடுத்து 1639ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22ஆம் நாள் ஒப்பந்தம் செய்து கொண்டார். அந்த நாளே சென்னை தினம் எனக் கடைபிடிக்கப்படுகிறது. சென்னை எனும் சென்னைப்ப நாயகர் பட்டன நிகழ்ச்சியை சமூக நீதி பேரவை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது.

இன்று 22.08.2024, வியாழக்கிழமை காலை 10 மணியளவில் சென்னை அமைந்தக்கரையிலுள்ள, அய்யாவு மஹாலில் இந்த நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்த நிகழ்ச்சிக்கு சித்த மருத்துவர் க.தணிகாசலம் தலைமை தாங்குகிறார்.

சமூக நீதி சத்திரியர் பேரவையின் இணைப் பொதுச் செயலாளர் எஸ்.எம். குமார் வரவேற்று பேசுகிறார். கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய தலைவர் பொன்குமார் சென்னப்ப நாயக்கர் படத்தை திறந்து வைத்து சிறப்புரை யாற்றுகிறார்.

நிகழ்ச்சியில் வன்னியர் பொது சொத்து நல வாரிய தலைவர் மு.ஜெயராமன் ஐஏஎஸ் (ஓய்வு), வன்னியர் பொது சொத்து நல வாரியத்தின் முன்னாள் தலைவர் ஜி.சந்தானம் ஐஏஎஸ் (ஓய்வு), இ.தசரதன் ஐஏஎஸ் (ஓய்வு), நீதியின் குரல் நிறுவனர் சி.ஆர்.பாஸ்கரன், சத்திரியர் வம்ச ஆசிரியர் சி.சுப்பிரமணி, பொறியாளரணித் தலைவர் எச். வெங்கடேசன், மாநில துணைத் தலைவர் அருள் அன்பரசு, தொழிலதிபர்கள் கிரியாடெக் பாஸ்கர், பி.வெங்கடேசன், க.மாரியப்பன், கல்வியாளர் எஸ். இராஜேந்திரன், பேராசிரியர் பி.முத்துசாமி, துணைத் தலைவர்கள் அம்பத்தூர் வே.ரமேஷ், பொன்.ஏழுமலை நாயகர், வி.வீரா, கி.தேவேந்திரன், அரியலூரை சேர்ந்த தொழிலதிபர் ஆர்.செல்லபாண்டியன், மருத்துவ கல்லூரி முன்னாள் முதல்வர் ஜெ.மோகனசுந்தரம், ஆர். பலராமன், தெ.வேலா யுதம், வணிகமணி ஆசிரியர் வீர.ஆறுமுகம், எழுத்தாளர் தமிழ்மகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு உரையாற்றுகின்றனர்.

இந்த நிகழ்ச்சியில் மயிலாடுதுறையில் இருந்து சுதந்திரப் போராட்ட தியாகி நாகப்பன் நினைவு ஜோதி கொண்டு வந்து மேடையில் தலைவர் பொன்குமாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

வேலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட

ஐந்து சட்டமன்றத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணி!

மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை!

வேலூர், ஆக. 22 -

வேலூர் மாவட்டச் செயலாளர், ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, அறிக்கை வருமாறு:

எதிர்வரும் 2025 ஜனவரி 1ஆம் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த பணிகள் முதற்கட்ட பணியாக மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன்படி, 2024 ஆகஸ்ட் 20 ஆம் தேதி முதல் 2024 அக்டோபர் 18 ஆம் தேதி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLO) ஒவ்வொரு இல்லத்திற்கும் சென்று வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல், வாக்குச்சாவடி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண்பாடுகளை களைதல், வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களின் சரியான புகைப்படங்களை இணைத்தல், வாக்குச்சாவடி எல்லைகளை ஓரளவு மறுசீரமைத்து செம்மைப்படுத்தி 2025 ஜனவரி 6 ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பணியை தொடர்ந்து, சிறப்பு சுருக்க திருத்த வாக்காளர் வரைவு பட்டியலை வரும் 2024 அக்டோபர் 29ஆம் தேதி வெளியிடப்படுவதை தொடர்ந்து அன்றிலிருந்து 2024 நவம்பர் 28ஆம் தேதி வரை வீடு,வீடாக வாக்காளர் பட்டியலை சரிபார்க்க வரும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு தேவையான விவரங்களை அளித்து ஒத்துழைப்பு வழங்கிட தேர்தல் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

மேற்கண்ட இப்பணியில் 100 சதவீதம் தூய்மையான செம்மையான வாக்காளர் பட்டியல் தயாரித்திட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்ட, வார்டு, ஊர்க்கிளை நிர்வாகிகள், கழகத்தோழர்கள் அனைவரும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தேனி வடக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் பி டி செல்லபாண்டியன் தலைமையில் தேனியில் நடைபெற்றது வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ் செல்வன் எம்பி நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினார் உடன் சரவணக்குமார் எம் எல் ஏ . மாவட்ட பொருளாளர் சுரேஷ் . மாவட்ட துணை செயலாளர்கள் செந்தில் முருகன் திரு கண்ணன் செயற்குழு உறுப்பினர் சங்கர் பொதுக்குழு உறுப்பினர் முருகேசன் தேனி நகர செயலாளர் நாராயண பாண்டியன் நன்றி உரையாற்றினார் மற்றும் சார்பு அணி அமைப்பாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

அகில இந்திய கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா நலவாரியங்களில் அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு நடத்திய பாராட்டு விழாவில் அமைச்சர் சி.வெ.கணேசன் கலந்து கொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்து பேசினார்.

தி.மு.க. ஆட்சியின் மூன்றாண்டு காலத்தில்

அமைப்புசாரா நலவாரியங்களில் 1848 கோடி ரூபாய் நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர் சி.வெ.கணேசன் தகவல்!

சென்னை, ஆக. 22 -

அகில இந்திய கட்டுமானம் மற்றும் அமைப்பு சாரா நலவாரியங்களில் அனைத்து தொழிற்சங்களின் கூட்டமைப்பு நடத்திய பாராட்டு விழாவில் அமைச்சர் சி.வெ.கணேசன் பேசியதாவது:

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றாண்டுகளில் 20 அமைப்புசாரா நலவாரியங்களில் 1848 கோடி ரூபாய் நலத்திட்ட உதவிகள் 23,70,288 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேலும், 27 நலத்திட்டங்களின் உதவித் தொகையை அதிகப்படுத்தி முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், வாரியங்களில் சர்வரில் உள்ள தகவல்கள் மாயமானதாக சிலர் தெரிவித்து வருகின்றனர். அது தவறான செய்தி ஆகும். சர்வரில் உள்ள தரவுகள் மாயமானதாக கூறப்படும் காலத்தில் மட்டும் (01.12.2023 முதல் 19.08.2024 வரை) 1,79,719 தொழிலாளர்கள் புதிதாக பதிவு செய்துள்ளனர்.

13,76,618 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

சர்வரில் உள்ள தரவுகள் மாயமானால் இலட்சக்கணக்கான பயனாளிகளுக்கு எவ்வாறு நலத்திட்ட உதவிகள் சென்றடைந்திருக்கும் என்ற கேள்வியை எழுப்பினார்.

மேலும், 3,55,169 நபர்கள் மாத ஓய்வூதியமாக ரூ.1,200 பெற்று வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில்

ரூ.698 இலட்சம் மதிப்பீட்டில் சாலை புனரமைக்கும் பணி!

சி.என்.அண்ணாதுரை எம்.பி. - அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தனர்!

திருப்பத்தூர், ஆக. 22 -

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில், பிரதம மந்திரி கிராம சாலைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் வாயிலாக செல்லரப்பட்டி முதல் ஆலமரத்து வட்டம் வழியாக ஆதியூர் வரை 6.01 கி.மீட்டர் தொலைவில் 698 லட்சம் மதிப்பீட்டில் சாலை புனரமைப்பு பணியினை ஊராட்சி மன்ற தலைவர் மேனகா விவேகானந்தன் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணா துரை எம்.பி., திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் செயற்பொறியாளர் வரதராஜபெருமாள், உதவி செயற்பொறியாளர் சிவசங்கரன் ஒன்றிய செயலாளர்கள் கே.எ.குணசேகரன், கே.எஸ்.ஏ.மோகன் ராஜ், ஒன்றிய சேர்மென்.திருமதி.திருமுருகன் மாவட்ட கவுன்சிலர்.சி.கே. சுப்பிரமணி, துணைசேர்மென். ஜி.மோகன் குமார், கவுன்சிலர்.சண்முக பிரியாகமலநாதன், தசரதன், சீனிவாசன், துணைத்தலை வர்கள். ஏ.பி.பழனி வேல், ஆனந்தன், வழக்கறிஞர். மாது மற்றும் கழக முன்னோடிகள், பெண்கள், இளைஞர்கள் என திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஆகஸ்ட் 22. 2024

19 – ஆம் ஆண்டு நினைவு நாள்!



மொழிப்போர் தியாகி, மக்கள் தொண்டர்

க.சொ.கணேசன் Ex.MLA அவர்கள்

தோற்றம் : 03-06-1941 மறைவு : 22-08-2005

ஆளுயர மாலையும்; ஆரத்தழுவும் மரணத்தையும்
ஒருசேரக் கருதி கழகத்திற்காக கடைசிவரை உழைத்தவரே...
உதயசூரியனில் கலந்துவிட்ட எந்தையே; நின் காலடிச் சுவடியே;
அரிச்சுவடியாய் கொண்டு மக்கள் பணியில் பயணிக்கும்...

க.சொ.க.கண்ணன் M.Com., மற்றும் குடும்பத்தினர்கள்
சட்ட மன்ற உறுப்பினர், ஜெயங்கொண்டம்,
தமிழ்நாடு சட்டமன்ற சட்ட விதிகள் ஆய்வுக்குழு உறுப்பினர்,
ஒன்றியக் கழகச் செயலாளர், தா.பழூர் கிழக்கு.

ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி தி.மு.க
அரியலூர் மாவட்டம்.